first batch அவர்களது ஆட்சிக்காலத்தில் நிதியொதுக்கப்பட்டு, தொடங்கப்பட்ட பழைய பாதாள சாக்கடை திட்டங்களுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதி ஒதுக்கியுள்ளார்கள். தற்போது விடுபட்ட பகுதிகளுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கியுள்ளார்கள். இத்திட்டம் கண்டிப்பாக வேகமாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.

14—

கல்லூரிக்குக் கட்டடம்

***3227—திரு. என். சுரேஷ் ராஜன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் தொகுதி, வடசேரியிலுள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்டவும், புதிய பாடப் பிரிவுகள் துவக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் தொகுதி, வடசேரி நெசவாளர் தெரு, அரசு உயர்நிலைப் பள்ளியில் தற்காலிகமாக செயல்பட்டு வந்த இப்புதிய அரசு கலைக் கல்லூரிக்கு நாகர்கோவில், கோணம் பகுதியில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைந்துள்ள வளாகத்தில், புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, தற்போது இக்கல்லூரியானது 5–9–2017 முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜனவரி 10]

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோணம் பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதற்கு மிக்க நன்றி. ஆனால், அங்கு படிக்கக்கூடிய மாணவர்களுக்குப் போதுமான College Professors and College Lecturers இல்லை. Guest Lecturers வந்துதான் பாடம் எடுத்துவிட்டுப் போகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஆங்கிலப் பிரிவில் 2 staff குறைவாக இருக்கிறார்கள். Economics–ல் ஒரு staff குறைவாக இருக்கிறார். Computer பிரிவில் 2 staff குறைவாக இருக்கிறார்கள். அதேபோல furniture குறைவாக இருக்கின்றது. இப்பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கும், போதுமான furniture பொருட்களைப் பெற்றுத் தருவதற்கும் இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் 2016–2017 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தக் கல்லூரியில் முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டில் மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கல்லூரியின் மாணவர்களுடைய சேர்க்கை சதவிகிதத்தைப் பார்க்கின்றபொழுது, ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் மொத்தம் 480. அதிலே முதலாம் ஆண்டு 180 பேருக்கு, 131 மாணாக்கர்கள் மட்டும் அங்கே படிக்கின்றார்கள். இரண்டாம் ஆண்டிலே 300 பேருக்கு, 175 மாணாக்கர்கள் மட்டும் அங்கே படிக்கின்றார்கள். அப்படியிருக்கின்ற பட்சத்திலே, அங்கு ஒப்பளிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் 15. அந்த 15 பணியிடங்களிலே 11 பேர் நிரந்தர ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அதிலே 4 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அதிலே கணினி அறிவியலுக்கு மட்டும் Guest lecturer–கவுரவ விரிவுரையாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். இப்பொழுது படித்துக் கொண்டிருக்கக்கூடிய மாணவர்களுக்குத் தேவையான கல்வியை

[2018 ஜனவரி 10

அளிக்கின்ற வகையிலே, கல்லூரி முதல்வரோடு சேர்த்து 12 பேர் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதோடு மட்டுமல்லாமல், அங்கே மாணவர்களுக்குத் தேவையான desk மற்றும் bench–கள் வாங்குவதற்கு 3,65,000 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்பொழுது அவை வாங்கி வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரிக்குப் புதிய பாடப் பிரிவுகள் உருவாக்கித் தரப்படுமா என்பதையும், நாகர்கோவில் பகுதியில் அண்ணா பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கக்கூடிய பொறியியல் கல்லூரிகளுக்கு எல்லாம் பொறியியல் உறுப்புக் கல்லூரி என்றுதான் பெயர் இருக்கிறதேயொழிய, அண்ணாவின் பெயர் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அண்ணா பொறியியல் கல்லூரி என்று பெயர் மாற்றம் செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளின் அடிப்படையிலே, 2017–2018 ஆம் ஆண்டுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த 5 ஆண்டு கால ஆட்சிக் காலத்தில் புதியதாக 961 புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டு, மாணவர்களின் தேவை பூர்த்தி செய்யப்பட்டது. இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே அதே அரசானது 268 புதிய பாடப் பிரிவுகளை இந்த ஆண்டு மட்டும் வழங்கியிருக்கிறது. அதிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைக்கின்ற அந்தக் கல்லூரிக்கு 2 புதிய பாடப் பிரிவுகள் வழங்கப்பட்டு, அதிலும் இன்றைக்கு மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அந்தக் கல்லூரியிலிருந்து கூடுதலாக 8 இளங்கலை பாடப்

2018 ஜனவரி 10]

பிரிவுகள் மற்றும் 7 முதுகலைப் பாடப் பிரிவுகள் தேவை என்று அரசுக்கு முன்மொழிவுகள் வரப்பெற்றிருக்கின்றன. வரக்கூடிய கல்வியாண்டிலே அதை ஆய்வு செய்து, அந்தப் பகுதி மாணவர்கள் அதிகமாக எந்தப் பாடப் பிரிவுகளை விரும்புகிறார்களோ, அந்தப் பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரி அங்கே இயங்குகிறது என்றும், அண்ணாவின் பெயர் எடுக்கப்பட்டுவிட்டது என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார். அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரி என்பது தனிப்பட்ட ஒன்று அல்ல. அண்ணா பல்கலைக்கழகத்தோடு ஒன்றாகச் சேர்ந்ததுதான் அந்த உறுப்புக் கல்லூரி. ஆகவே, அண்ணாவினுடைய பெயரானது எடுக்கப்படவில்லை. ஒன்றாக இணைத்து தரமான கல்வியை வழங்குகின்றபட்சத்திலேதான் இன்றைக்கு இந்திய அளவிலே 100 பல்கலைக்கழகங்கள் தேர்வு செய்யப்பட்டதிலே, நம்முடைய அண்ணா பல்கலைக்கழகமானது 6–வது இடத்திலே இருக்கிறது என்பதைப் பெருமையோடு இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே, இந்தக் கல்வியாண்டிலே கூடுதலாக இரண்டு புதிய பாடப் பிரிவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. வரக்கூடிய கல்வியாண்டிலே அந்தப் பகுதி மாணவர்கள் எந்தப் பாடப் பிரிவுகளை விரும்புகிறார்களோ, அவற்றை வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

15—

கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்

***22299—திரு. கே.பி.பி. சாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர் தொகுதியில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?